

தருமபுர ஆதீனம் 25-ஆவது மகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

குத்தாலமென வழங்கும்

திருத்துருத்தித் தல வரலாறு

இஃது

இவ்வாலய பரம்பரைத் தருமகர்த்தா

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
25 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகள் அவர்களின்

திருவுள்ளக் குறிப்பின்படி

குத்தாலம்

ஸ்ரீ உக்தவேதேசுவர சுவாமி தேவஸ்தானத்தில்

வெளியிடப்பெற்றது

1958

முதற்பதிப்பு 1943

இரண்டாம் பதிப்பு 1958

TAMIL NADU ARCHIVES LIBRARY
MADRAS
112779

O23:38.21193
N43-2

ஞானசம்பந்தம் அச்சகம்,

தருமபுரம்.

உ

சிவமயம்

பொருளடக்கம்

பக்க எண்

1.	தலமும் இருப்பிடமும்	...	3
2.	தலப் பெயர்கள்	...	,,
3.	கோயிலமைப்பு	...	4
4.	மூர்த்திகள்	...	,,
5.	தலப் பெருமை	...	6
6.	புராண வரலாறு	...	7
7.	தீர்த்தங்கள்	...	14
8.	தல விருட்சம்	...	16
9.	வழிபட்டோர்கள்	...	17
10.	சுற்றுக் கோயில்கள்	...	18
11.	மண்டபங்கள்	...	,,
12.	சிற்பங்கள்	...	,,
13.	நித்திய பூஜைகளும் திருவிழாக்களும்	...	19
14.	சொத்துக்கள்	...	,,
15.	திருப்பணி	...	,,
16.	சமயப்பணி	...	20
17.	நிர்வாகம்	...	,,
18.	புராணங்களும் திருப்பாடல்களும்	...	21

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருத்துருத்தித் தல வரலாறு

1. தலமும் இருப்பிடமும்

வான்போய்ப்பினும் தான்போய்யாது புனல்பரந்து பொன்கொழிக்கும் சோணுட்டில் தஞ்சை ஜில்லாவில் துருத்தி என்று வழங்கும் தலங்கள் இரண்டு. ஒன்று திருத்துருத்தி. மற்ருென்று திருப்பூந்துருத்தி. திருத்துருத்தி என்பது மாயூரமிருந்து கும்பகோணம் செல்லும் வழியில் குத்தாலமெனும் பெயருடன் புகைவண்டி நிலயமாக விளங்குகின்றது. மாயூரமிருந்து கற்சாலேயும் மட்சாலேயும் செல்லுகின்றன. பஸ், வண்டி முதலிய வசதிகளும் உள. காவிரி இத் தலத்திற்கு அணிசெய்கின்றது.

2. தலப் பெயர்கள்

ஆற்றிடைக் குறையாகவுள்ள தலங்களுக்குத் துருத்தி என்று பெயர் வழங்கப்படுகிறது. இது ஆற்றிடைக்குறையில் அமைந்து விளங்குகின்றமையின் அப்பெயர் பெற்றது. முன் இருபுறமும் சென்ற காவிரி

தற்போது ஆலயத்திற்கு வடபுறமாக ஓடுகின்றது. தல விருட்சம் உத்தாலமரம் ஆதலின் உத்தாலவனம் எனவும் பேயர் வழங்கப்படுகின்றது. அது குத்தாலம் என மருவி வழங்கப்படுகிறது.

3. கோயிலமைப்பு

கோயில் ஊரின் நடுவில் மிக அழகாக விளங்கு கிறது. இரண்டு பிராகாரங்கள் அமைந்திருக்கின்றன. இறைவர் மேற்கு முகமாகவும், இறைவி தெற்கு முக மாகவும் எழுந்தருளி மக்களுக்கு அருள்பாலிக்கிருர்கள். சுவாமி கோயில், அம்மையார் கோயில் ஆகிய இரண்டும் தனித்தனியே மக்கள் வலம் வருமாறு பிராகாரங் களுடன் விளங்குகிறது. மேற்குத் திருவாயிலே இராஜ கோபுரம் சிறப்பிக்கின்றது. வேளிப் பிராகாரத்தில் வடமேற்குமூலேயில் சுந்தர தீர்த்தம் இருக்கின்றது. அதன் மேல்கரையில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் கோயில் அமைந்துள்ளது.

4. மூர்த்திகள்

இறைவர் திருநாமம் உக்தவேதேசுவரர், சோன்ன வாறறிவார். இறைவி திருநாமம் அமிர்தமுகிளாம்பிகை யம்மை, அரும்பன்னவனமுலேயார். தல விநாயகர் துணேவந்த பிள்ளேயார். மற்றும் மணவாளநாதர், நறுஞ்சாந்திளமுலேயம்மையார் ஆகிய பல மூர்த்திகளும் உள்ளனர்.

சொன்னவாறறிவார் :— இத் தலத்தில் அம்மையார் இறைவனைப் பூசிக்க, இறைவன் காட்சியளித்து அம்மையார் திருக்கரத்தைப் பற்ற, அம்மையார் வணங்கி, "விதிமுறைப்படி தாய் தந்தையர்கள் மனமகிழ்ச்சியடைய அடியேனை மணம் செய்துகொள்ள வேண்டும்" என்று விண்ணப்பித்தனர். இறைவனும் "நன்று ; இவ்வுலகில் விதியினை யாமே விதித்தோம் ; விதித்த அவ் விதியின்படி யாமே நடக்காவிட்டால் அது மாறுபாடு அடையவுங் கூடும். ஆதலின் அதன்படி மணஞ்செய்து கொள்ளுகிறோம்" என்று அருள்பாலித்தனர். இவ்வாறு இறைவன் தானே சொல்லிய விதியினைத் தானே அறிந்தமையால் சொன்னவாறறிவார் எனத் திருநாமம் பெற்றார்.

மணவாளநாதர் :— இது உமையம்மையார் வேண்டுகோட்படி அம்மையாரைத் திருமணஞ் செய்து கொள்ளுதற்காக எழுந்தருளிய திருவடிவம். உக்த வேதேசுவரரின் திருமுன் தல விருட்சத்தினடியில் உள்ளது. தற்போது பாதுகைமாத்திரம் காணப்படுகின்றது.

நறுஞ்சாந்திளமுலை அம்மையார்:— திருமணத்தின் பொருட்டு அம்மையாருக்கு மாலை, சாந்து முதலியனகொண்டு அழகு செய்யப்பட்டதாதலின் அப் பெயர் பெற்றார். இத் திருவுருவம் மணவாளநாதர் திருப்பாதுகையின் முன் எதிர்ப்புறமாகவுள்ளது.

துணை வந்த பிள்ளையார்:— இறைவன் அம்மையாரைத் திருமணம் செய்து கொள்வதற்குக் கயிலையை

அகன்று இத் தலத்து வந்தகாலை விநாயகரும் துணை யாக வந்ததால் துணைவந்த விநாயகர் எனத் திருநாமம் பெற்றார். இவர் சொன்னவாறறிவார் திருச்சந்நிதானத் தில் எழுந்தருளியிருந்து அன்பர்களுக்கு அருள்வழங்கு கின்றார்.

5. தலப் பெருமை

உமையம்மையார் சிவபூசை செய்து இறைவனைத் திருமணஞ் செய்துகொண்டது; அக்கினி தன்னால் தீண்டப்பெறுகின்ற பொருள்கள் யாவும் அழிவுறுதலி னால் உலகவர் பகரும் நிந்தை மொழியினைச் சகிக்க முடியாமல் இத் தலத்து வந்து அப் பழியினைப் போக்கிக் கொண்டது; விக்கிரமசோழனது மனைவியாகிய கோமளை என்பாளுக்கு எவ்விடத்துந் தீராத குட்டநோயினைத் தீர்த்தது; வருணனுக்குச் சலோதரம் என்னும் பிணி யினை நீக்கி அருள்பாலித்தது; காளி திருநடங்கண்டு வணங்கி ஊர்க்காவல் புரிகின்ற உயர்வுடையது; காமன் தேவர்கள் சொல்லைக் கேட்டு ஆராய்ச்சியில் லாமல் யோகஞ் செய்த இறைவன்மீது தான் அம்பை எய்த குற்றத்தை நீக்கிக்கொள்ளும்பொருட்டு வழிபட் டது; காசிபன், ஆங்கிரசன், கௌதமன், மார்க்கண்டன், வசிட்டன், புலத்தியன், அகத்தியன் ஆகிய ஏழு முனிவர் களும் வழிபட்டுச் சீவன் முத்தி பெற்றது; பரிச்சேத முனிவரது குமாரனான சிவபக்தன் என்பானுக்கு முன்னை வினையினால் ஏற்பட்ட காசநோயினை நீக்கிக் கருணை பாலித்தது; வித்துவன் மாலி என்பான் இறைவனை வேண்டிக் கதிரவன் தன்மையையடைய, அது கண்ட

கதிரவன் அவனுடன் போர் புரிந்து தோற்று இத்தலத்து வந்து தவஞ்செய்து இழந்த அதிகாரத்தைப் பெற்றது ஆகிய பல பெருமைகளை உடையது. அக் கதிரவன் வேண்டுகோட்படி இறைவன் அருள்பாலித்த நாள் கார்த்திகை ஞாயிற்றுக்கிழமை ஆதலின் அந்நாளில் இத் தலத்திற்கு வந்து நீராடி வணங்குபவர்களுக்குப் பேரின்பமுத்தி கொடுப்பது.

இத்தலப் பெருமையையுணராது காசியை நோக்கிச் சென்ற உருத்திரசன்மன் என்னும் மறையவனைத்தடுத்து அருள்பாலித்தது. பரதமா முனிவன் பூசித்துத் தன் மனையாளோடு வீட்டின்பம் பெற்றது.

6. புராண வரலாறு

அம்மையார் திருமணம் :— திருக்கயிலாயமலையில் அம்மையார் இறைவனை நோக்கி, “தேவரீர் அடியேனை மணஞ்செய்து நெடுநாட்களாயின ஆதலின் இப்போழுது ஒருமுறை மணஞ் செய்தருளல்வேண்டும்” என்று பிரார்த்தித்தனள். அதற்கு இறைவன் அப்போதே மணஞ் செய்து கொள்வதாகக் கூறுமல் “அடுத்த கற்பத்தில் செய்வோம்” என்றனர். அது கேட்ட இறைவி வருத்தமுற்றுத் தோழிகளுடன் விளையாடச் சென்றனள். அஃதறிந்த இறைவன் “நீ பசுவாகுக.” என்றருளினர். இறைவி நடுங்கி, “அண்ணலே யான் தங்களிடம் மகிழ்ச்சி வேண்ட, அதற்கு மாருக மயக்கத்தைத் தந்தருளினீர். யாது செய்வேன்? பொறுத்தருள வேண்டும்” என்ருள். இறைவன்

" அஞ்சற்க ; நீ பசுவாகும்போழுது நாமும் விடையாகி வருவோம் " என்றருளினர். சற்று மனங்தேறிய அம்மையார் " அடியேனுக்கு இச் சாபம் தீரும் காலம் யாது " என்ன, இறைவன் " நீ காவிரியின் தென்பால் பசு உருவுடன் உலாவுவாய் ; அப்போது நின் காற் குளம்பின் தழும்பினை யாம் பெறுவோம். உன் வடிவம் நீங்கும். நீங்கி ஒரு பிராமணன் செய்யும் வேள்விக் குண்டத்தில் தோன்றுவாய். யாமும் விடை வடிவத்தை விடுத்து உன்னைத் திருமணஞ் செய்துகொள்வோம் " என்று அருளினர். அவ்வாறே அந்தணர் குலத்தோன்ற லாகிய பரதமா முனிவர் என்பவர் செய்த வேள்விக் குண்டத்து அம்மையார் மகவாகத் தோன்றினர். இறை வனைத் திருமணஞ் செய்து கொள்ளும் பொருட்டுச் சிவ பூசை செய்ய எண்ணினள். தோழியர்களுடன் காவிரிக் குச் சென்று நீராடி அக் காவிரியின் நடுவில் மணல் மேட்டில் கருப்பக்கிரகம், மதில் முதலியன அமைத்து அதனடுவே இலிங்கமும் அமைத்து முறைப்படி அபிஷேகம் முதலியன செய்து மலர்கொண்டருச்சித்து ஆராதனைகள் செய்தனள். இவ்வாறு ஒவ்வொரு நாளும் இறைவனைப் பூசித்துத் தம் இல்லம் ஏகினள். ஏழு நாட்கள் ஆயின. எட்டாவது நாளில் இறைவனே அம்மையின் திருவுள்ளப்பாங்கினையறிந்து தம்மைப் பூசிப்பதற்கு முன்பாகவே கருங்கல்லால் தாமே ஆலயம் அமைத்து இலிங்க வடிவாய் அமர்ந்தருளினர். அம்மை யாரோ அன்று வழக்கப்படி எழுந்து நற்சகுனங்கள் தோன்ற, பாங்கியர் சூழ, காவிரியை அடைந்தாள். கல்லாலயத்தைக் கண்டு களிப்புற்றாள். மகிழ்ச்சி

மீதூரப் பூசனை புரிந்து தோத்தரித்து நின்ருள். இறைவன் இலிங்கத்தினின்றும் தோன்றி அம்மையார் திருக்கரத்தைத் தீண்டினர். உடனே அம்மையார் வணங்கி “தேவரீர் அருளிச்செய்தவாறு நூல்களில் விதித்த விதி நிலைபெற, தாய் தந்தையர்கள் உவப்ப, அடியேனைத் திருமணஞ் செய்துகொள்ள வேண்டும்” என்று விண்ணப்பித்தனள். இறைவனும் “அவ்வாறே செய்வோம்” என்று அருளித் திருவுருக்கரந்தனர். அம்மையாரும் இருப்பிடமெய்தினள்.

பின்னொருநாள் இறைவன் நந்தியம்பெருமான் வாயிலாகத் தாம் திருமணஞ் செய்ய வருதலை முன்னர்ப் பரதனுக்கறிவித்து, செய்திவந்த பின்னர், மணவாள கோலத்துடன் விடையில் ஏறி, விநாயகர் முன் செல்ல, உத்தாலமரம் நிழல் செய்துவர, தேவர்கள் புடைசூழ இத் தலத்து ஆலயத்திற்கு எழுந்தருளினர். மறுநாள் விதிமுறைப்படி அம்மையாரைத் திருமணம் புரிந்தருளினர். இறைவன் தோன்றியவிடத்துத் தமது பாதுகையை விட்டு மறைந்தனர். அவ்விடத்தில் இன்றும் திருப்பாதுகை எழுந்தருளியிருக்கிறது.

உருத்திரசன்மன் :— மறையவர் குலத்தில் உதித்தவன். மாலறநேய மலிந்தவர் வேடமும், ஆலயந் தானும் அரனெனத் தொழுபவன். அவன் இத் தலத்தின் பெருமையினையுணராது, காசியம்பதியே தன்கண் இறந்தார்க்கு முத்தியளிக்குமெனக் கருதி மனைவி மக்கள் முதலியோரையும் விடுத்து உவகையுடன் காவிரியைக்

கடந்து சென்ருன். விந்திய மலையை அணுகினுன். இறைவர் அம் மறையவனுக்கு இத் தலத்தின் பெருமை யினை உணர்த்தத் திருவுளங்கொண்டனர். குண்டோ தரனை நோக்கி "நீ பாம்பு உருக்கொண்டு அவன் செல்லும் வழியில் கிடந்து மறித்துக்கொள்வாய்" என்று அருளினர். குண்டோதரனும் அவ்வாறே மலைப்பாம் பாகக் கிடந்தான். சென்ற உருத்திரசன்மன் கண்டு பயந்து பலவகையாலும் தாண்டிச் செல்ல முற்பட்டான். பாம்பு மேலும் மேலும் தனது படத்தை விரித்துப் பயமுறுத்தியது. மறையோன் கருட மந்திரத்தை உச்சரிக்கப் பாம்பு மயங்கிக் கீழே வீழ்ந்தது. அதன் நெட்டுயிர்ப்பால் கானம் கரிந்தது. உயிர்வர்க்கங்கள் யாவும் மயங்கின. அது கண்ட மறையவன் நல்வினைப் பயனுல் "இஃது துருத்திப் பெருமானுல் விளைந்தது" என உட்கொண்டு அப் பெருமானை வணங்கி ஓலமிட் டரற்றினன்.

ஓசையினைக் கேட்ட பெருமான் பாம்பாட்டி வேடங் கொண்டு மறையவன் முன்னர்த் தோன்றி "யாம் திருத்துருத்தி ஐயர் கட்டளையால் இங்கு வந்தோம்" என்று அருளி, அவன் விருப்பின்படி குழலினை ஊதினர். மயங்கிய பாம்பு படமெடுத்து ஆடியது. அது கண்ட மறையவன் "இவர் எம்பெருமானே?" என்று ஐயங் கொள்ள, இறைவர் தாம் கொண்ட வடிவத்தை மாற்றி மணவாளநாதராகக் காட்சியளித்தனர். குண்டோதர னும் முன்னைய உருப்பெற்ருன். மறையவன் வீழ்ந்து வணங்கி நின்ருன். பெருமானும் "அன்பனே! காசியை

அடையவிரும்பினுய்; ஆனல் அதனைவிட திருத்துருத்தி மிகவும் சிறந்த தலம். கங்கையினும் காவிரி சிறந்தது. அதன் கீழ்பால் விசுவநாதர் எழுந்தருளியிருப்பார். அக்கினிதிசையில் பைரவர் இருப்பார். அத் தலத்தை அடைக '' என்றருளிச்செய்தனர். மறையவன் பணிந்து “ பெருமானே ! இனி எவ்வாறு அங்குச் செல்வேன் ; உடல் களைத்துவிட்டதே '' என்று விண்ணப்பிக்க, இறைவர் ஒரு பொய்கையைத் தோற்றி “ இதன்கண் மூழ்குக '' எனப் பணித்து மறைந்தனர். மறையவனும் அதில் மூழ்கி இத் தலத்துக் காவிரித்துறையில் எழுந்து விசுவநாதரையும், பைரவரையும் பணிந்து ஆலயத்திற்கு வந்து சிவபெருமானையும் வணங்கினுன். சிலகாலம் பணிசெய்திருந்து முத்தி எய்தினன்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் :— தலங்கள் பலவற்றைத் தரிசித்தும் ஆங்காங்கு பாமாலை தொடுத்துச் சாத்தியும் வருகின்ற சுந்தரர் திருவொற்றியூர்ப் பெருமானைப் பணிந்து ஆங்குத் தங்கினர். மகிழமரத்தடியில் “ நின்னைப் பிரியேன் '' எனச் சபதங் கூறிச் சங்கிலியாரை மணஞ்செய்து கொண்டனர். சில நாள் அங்குத் தங்கியிருந்தார். ஆரூர்ப் பெருமான் திருக்கோலம் நினைவுக்குவந்தது காணுதற்கு முற்பட்டார். சபதம் மறந்து ஒற்றியூரை அகன்றுர். அதனுல் இரு விழிகளும் ஒளி மழுங்கின. அதனேடு திருமுல்லைவாயிலை அடைந்து பெருமானிடம் ஊன்றுகோல் பெற்றுர். பல தலங்களை வணங்கிக்கொண்டு காஞ்சியை அடைந்து ஏகம்பநாதரை வணங்கினுர். ஒரு கண் ஒளி நிறைந்தது. காவிரியைக் கடந்து ஆவடுதுறையையடைந்து

பணிந்து அகன்றனர். அப்போழுதும் முன்சேய்த சபதம் தவறியது காரணமாகவே உடலில் பிணி ஏற்பட்டது. அதனுல் மேனி கருநிறம் அடைந்தது. உள்ளம் புழுங்கினுர். பரவை காணில் என்சோல்வாள் ? பாரோர் பலரும் என் நினைப்பர் ? எம்மான் அருளும் இப்படியோ ? என்று கருதினர். திருத்துருத்தியையடைந்தால் அகலும் என எண்ணினர். எண்ணியவாறே இத் தலத்துக்கு வந்தனர்.

ஆலயத்தினுட் சேன்று இறைவனை வணங்கி, "தேவரீர் அடியேனுக்கு ஏற்பட்ட தீராத நோயினைத் தீர்த்துக் கருணைபாலிக்கவேண்டும்" என்று விண்ணப்பிக்க, இறைவன் "அன்பனே! வருத்தம் நீங்குக; பதும தீர்த்தத்தில் மூழ்குக" என்று திருவாய்மலர்ந்தருளினர். சுந்தரர் அவ்வாறே அத் தீர்த்தத்தில் மூழ்கி எழுந்தார். உடற்பிணி நீங்கிற்று. ஒளி மிகுந்தது. கண்டு வியப்புற்ருர். "மின்னுமா மேகங்கள்" என்று எடுத்துத் திருப்பதிகம் பாடினுர். மீண்டும் பன்முறை வணங்கி விடைபேற்றுக்கோண்டு இத் தலத்தை அகன்ருர்.

சூரியன் :— வித்துவன்மாலி என்னும் திதியின் புதல்வன் சுக்கிரன்பாற் சேன்று தலங்களிற் சிறந்தது யாது ? என்று வினுவி அறிந்து, இத் தலத்து வந்து, பதும தீர்த்தத்தில் நீராடித் திருநீறுங் கண்டிகையும் பூண்டு, இறைவனையும் இறைவியையும் அருச்சித்து வழிபட்டுத் தவம் புரிவானுயினன். அவனது அருந்

தவத்தைக் கண்ட இறைவன் காட்சியளித்து "அன்பனே ! விரும்பியது யாது ? கூறுக" என்ன. அவன் "கதிரவனுகும் வரமும் போற்றேரும் அடியேனுக்குத் தந்தருளவேண்டும் ; இன்னும் கதிரவன் போல நானும் மகாமேருவை வலம் வருதல்வேண்டும்" என்று விண்ணப்பித்தான். இறைவரும் அவ்வாறே அருள்பாலித்து மறைந்தனர்.

விரும்பியதைப் பேற்ற வித்துவன்மாலியும் இறைவனை வணங்கிப் போற்றேருர்ந்து ஆகாய்த்திலெழுந்து உலகவரைப் பார்த்து, சூரியன் தக்கன் யாகத்தில் சென்று குறையுற்றது முதலாகிய பல குற்றங்களைக் கூறிக்கோண்டு கிழக்கே உதித்தான். சூரியன் மேற்கே உதித்தான். வித்துவன்மாலி மேருவின் வடபால் வந்தால் சூரியன் தேன்பால் வருவான். இவ்வாறு வருதலால் உலகத்தில் இரவு என்பதே இல்லை. உயிர்கள் மயங்கின. அது கண்ட வியாழபகவான் சூரியனிடஞ்சென்று, "காலத்தை அளந்து காட்டும் கடவுளாகிய நீ காலத்தைக் காட்டாதிருப்பது முறையன்று" எனக் கூற, சூரியன் வித்துவன்மாலியுடன் போர்புரியத் தலைப்பட்டான். போருக்காற்றுதவனுய வித்துவன்மாலி "துருத்திநாயகனே ஓலம்" என்று தேரோடு மண்ணில் வீழ்ந்தான். அது கண்ட இறைவர் அவனுக்கு அபயம் அளித்துச் சூரியனைச் சினந்து நோக்கச் சூரியன் தேர் வீழ்ந்தது. வித்துவன்மாலி தேர் எழுந்தது.

கீழேவிழுந்த சூரியன் தன் தந்தையிடம் நிகழ்ந்தது கூறி அவராணைப்படி இத் தலத்து வந்து நீராடி இறைவனை வழிபட்டுத் தலத்தின் தேன்பால் அரசமரத்தடியில்

112779
Q93;38.2119 3
N43-2

விநாயகப்பெருமானைப் பிரதிட்டித்து வணங்கி, அதன் மேல்பால் கோயில் ஒன்று அமைத்து முறைப்படி பூசித்து வந்தான். பின்னர் தவத்தில் அமர்ந்தான். அத்தவ அழலால் வேதும்பிய தேவர்கள் இறைவனிடம் விண் ணப்பிக்க, இறைவன் கதிரவன் வடிவத்தைக் கொண்டு சூரியனெதிர் தோன்றி, “ கதிரவ ! துருத்தி ஆலயத்தி லுள்ள தீர்த்தத்தில் நீராடி ஓராண்டு இறைவனை வழி படுக. பின்னர் இழந்த தன்மையை அடைவாய் ” என்றருளினன். சூரியனும் அவ்வாறே ஓராண்டு வழிபட இறைவன் காட்சியளித்தான். சூரியன் வணங்கி “ ஐயனே ! அடியேன் முன்னர் இழந்த தன்மையைப் பெற அருள்பாலிக்கவேண்டும். கார்த்திகை ஞாயிருகிய இன்று பதும தீர்த்தத்திலும், காவிரி நதியிலும் நீராடி வழிபடுவோர்கள்யாவரும் விரும்பியபேற்றைப் பெறுதல் வேண்டும். இன்னும் அடியேன் தவஞ் செய்த இடம் கதிராமங்கலம் எனப் பெயர் எய்தல் வேண்டும். இதுவே எனது வேண்டுகோள் ” என்ருன். இறைவனும் “ அவ் வாறே ஆகுக ” என அருள்பாலிக்க, சூரியன் வணங்கி இருப்பிடஞ் சென்று அரசியலைப் பெற்று மகிழ்ந்தான். வித்துவன்மாலியும் கார்த்திகை ஞாயிறில் தீர்த்தமாடிச் சொன்னவாறறிவாரை வழிபட்டுப் பேரின்பம் பெற்ருன். அதுமுதல் சூரிய(கதிரவ)ன் தவஞ் செய்த இடம் கதிரா மங்கலம் என்ற பெயர் இன்றும் வழங்கப்படுகிறது.

7. தீர்த்தங்கள்

காவிரி நதி :— ஆலயத்திற்கு வடபால் ஒருபர்லாங் தொலைவில் கிழக்கு நோக்கி ஓடுகின்றது. இத் தீர்த்தம்

மிகச் சிறப்புடையது. சதாநந்தர், வச்சன் முதலிய முனிவர்கள் இதிலும் நீராடி முத்தியின்பம் பெற்ருர்கள்.

" தவஞ்செயும் போகரும் யோகரும் புலரிவாய்
மூழ்கச் செல்லுமா காவிரி "

காவிரி தீர்த்தம்

" ஆடுவார் பாவந்தீர்த்து அஞ்சனம் அலம்பித்
திகழுமா காவிரி "

" பொழிந்திழி மும்மதக் களிற்றின மருப்பும்
பொன்மலர் வேங்கையி னன்மல ருந்தி

இழிந்திழிந் தருவிகள் கடும்புன லீண்டி
யெண்டிசை யோர்கலூ மாடவந் திங்கே
சுழிந்திழி காவிரி........''

என்பன சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருள் வாக்கு.

சுந்தர தீர்த்தம்: — இது தாமரைத் தடாகம் எனவும், பதும தீர்த்தம் எனவும் வழங்கப்படும். கோயிலுள் வடமேற்கு மூலையிலிருக்கிறது. கௌதமரின் புதல்வரான சதானந்த முனிவர் தமது தந்தையார் அறிவித்தவாறு இரண்டு அயன காலம் இத் தீர்த்தத்தில் நீராடி மெய்ஞ்ஞானம் பெற்றனர். வச்சனென்னும் முனிவர் "அடியேனுக்கு மகப்பேறு வேண்டும்; பின்னர் உண்மை ஞானமும் கைவரவேண்டும்; இதற்கு யாது செய்வது" என்று தமது தந்தையிடம் முறையிட்டு, அவர் ஆணைப்படியே இத் தலத்து வந்து சுந்தர தீர்த்தத்தில் மூழ்கி எண்ணியன பெற்றார். புலத்தியன் முதலிய முனிவர்கள் இத் தீர்த்தத்தில் மூழ்கி இன்புற்றார்கள். சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு நோய் நீக்கம் செய்ததால் இப் பெயர் பெற்றது.

அக்கினிதீர்த்தம், காளிதீர்த்தம், புண்டரீகதீர்த்தம், காமதீர்த்தம், கதிரவதீர்த்தம், மார்க்கண்டதீர்த்தம் முதலிய பல தீர்த்தங்கள் இத் தலத்தைச் சுற்றிலும் இருக்கின்றன.

8. தல விருட்சம்

உத்தாலம் :— இது பெருமான் அம்மையாரைத் திருமணஞ்செய்ய எழுந்தருளிய காலத்து அப்பெருமான்



உத்தால மரம்

ஆணைப்படி நிழல் செய்துகொண்டு உடன் வந்தது. இத் தலத்துக்கு வந்ததும் பெருமான் அதனை இடது பாகத்து நிறுத்தி அதன் கீழ்ப்பாகத்தில் வேதமாகிய பாதுகையில் தாமும் எழுந்தருளினர்.

9. வழிபட்டோர்கள்

உமையம்மையார், அக்கினி, வருணன், காளி, காமன், காசிபன், ஆங்கிரசன், கௌதமன், வசிட்டன்,

மார்க்கண்டன், புலத்தியன், அகத்தியன், சிவபக்தன், வித்துவன்மாலி, கதிரவன், உருத்திரசன்மன், பரதன், புண்டரீகன், ககோளமுனிவன், புலகன், குச்சன், விக்கிரமன், சுந்தரமூர்த்தி சுவாமிகள், சதானந்தர், வச்சன், சோமசேகரன், தருமசன்மர், (மனைவி) நமரை, சுமதி, சௌதரிசன முனிவர் முதலியோர் வழிபட்டுத் தங்கள் தங்கள் விருப்பின்படிப் பற்பல பேறுகளைப் பெற்றுள்ளார்கள்.

10. சுற்றுக் கோயில்கள்

சுற்றுக் கோயில்கள் ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை.

11. மண்டபங்கள்

அலங்காரமண்டபம், தீர்த்தவாரிமண்டபம் முதலிய மண்டபங்கள் இருக்கின்றன. தீர்த்தவாரிமண்டபம் இறைவன் சந்நிதானத்திற்கு எதிரில் காவிரிக் கரையில் இருக்கிறது.

12. சிற்பங்கள்

சிற்பங்கள் அதிகமாகக் காணப்படவில்லை. சில பல்லவர்கள் காலத்திய சிற்பத்திறனை விளக்குவனவாக இருக்கின்றன

13. நித்திய பூஜைகளும் திருவிழாக்களும்

நாடோறும் காரணகாமிக ஆகமங்களின்படி ஐந்து கால பூஜை நடைபெற்றுவருகின்றது. கார்த்திகைத்திங்கள் ஞாயிற்றுக்கிழமையிலும், தைத்திங்கள் வெள்ளிக்கிழமையிலும் இறைவர் உலா வந்து காட்சியளித்துத் தீர்த்தங்கோடுத்தருளுவர். அநேக மக்கள் கூட்டங்கூட்டமாக வந்து காவிரி நதியில் நீராடி இறைவனை வழிபட்டுச்சேல்வார்கள். மற்றைய நவராத்திரி முதலிய ஏறுபடிகளும் நடக்கின்றன.

14. சொத்துக்கள்

நன்சேயில் சுமார் 99 - 65 ஏக்கரும், புன்சேயில் சுமார் 105 - 13 ஏக்கருமாக நிலங்கள் இருக்கின்றன. அம்மையாருக்கு வெள்ளியாலாகிய நிலையங்கி இருக்கிறது. தேர்கள் இரண்டும் பல மர வாகனங்களும் உள்ளன. சுமார் 2500 ரூபாய் போறுமானமுள்ள திருவாபரணங்கள் இருக்கின்றன. இரண்டு வீடுகளும் இருக்கின்றன.

15. திருப்பணி

பள்ளமாக இருந்த சுவாமி கோயில் உட்பிராகாரத்தைக் கப்பி போட்டு உயர்த்திக் கருங்கல் தளவரிசை போடப்பட்டது. பிராகாரத்தில் கிணறு ஒன்று புதிதாகக் கட்டப்பெற்றது. திருமாளிகைப்பத்தி மண்டபங்கள் முழுதும் உள்ளும் புறமும் சிமேண்டுபூசிச் சேப்பனிடப்

பட்டிருக்கின்றது. திருமடைப்பள்ளி ஒன்றும் புதிதாகக் கட்டப்பட்டிருக்கின்றது. வடக்குத் திருமதில் திருத்தி அமைக்கப்பட்டது. வெளிப் பிராகாரம் தெற்குத் திரு மதில் இராஜகோபுரம் வரை புதிதாகக் கட்டப்பட்டது. கோபுர வாயில் தளவரிசை போடப்பட்டது. இராஜ கோபுரம் யாளவரி வரை பழுதுபார்த்துப் புதிப்பித்திருக் கிறது. சந்நிதியில் ஒரு வீடு கட்டி அதற்கு சுற்றுச் சுவர்கள் வளைவுச் சுவர்கள் போடப்பட்டிருக்கின்றன.

16. சமயப்பணி

நவராத்திரி, ஆடிப்பூரம், கார்த்திகைச் சோமவாரம் முதலிய சிறப்புத் திருநாட்களில் ஆதீனப் பிரசாரகர் களைக் கொண்டும் மற்றும் பல அறிஞர்களைக்கொண்டும் சமய விரிவுரைகளாற்றச் செய்யப்படுகின்றன. ஏனைய தேவஸ்தானங்களைப் போல இத் தேவஸ்தானத்திலும் நூல் நிலயம் அமைத்து நாளடைவில் பெரிதாக்கிக் கொண்டுவரப்படுகிறது.

17. நிர்வாகம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீன பரிபா லனத்திற்கு உட்பட்ட தேவஸ்தானங்களுள் இதுவும் ஒன்று. ஆதீனகர்த்தரவர்களாக எழுந்தருளி இருக்கும் இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிர **மணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்**

ஆதீன கர்த்தா ஸ்தானத்தை வகிக்க ஆரம்பித்தது (20—5—45) முதல் இவ்வாலயத்தையும் பரிபாலனம் செய்துவருகின்ருர்கள்.

18. புராணங்களும் திருப்பாடல்களும்

மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் இயற்றிய திருத்துருத்திப் புராணம் என்ற தல புராணம் ஒன்றும் செய்யுள் வடிவத்துடன் உள்ளது. 1602 திருவிருத்தங்கள் கொண்டன. அது வசனத்துடன் இவ் ஆதீன உதவி பெற்று அச்சிடப்பெற்றிருக்கிறது. திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய பதிகங்கள் இரண்டும், திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய பதிகம் ஒன்றும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய பதிகம் ஒன்றும் இருக்கின்றன. மற்றும் பல திருமுறைகளிலும் சில பாடல்கள் காணப்படுகின்றன.

திருவிராகம் பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

வரைத்தலைப் பசும்பொனே டருங்கலன்க ளுந்திவந்
திரைத்தலைச் சுமந்துகொண் டெறிந்திலங்கு காவிரிக்
கரைத்தலைத் துருத்திபுக் கிருப்பதே கருத்தினய்
உரைத்தலைப் பொலிந்துனக் குணர்த்துமாறு வல்லமே. 1

அடுத்தடுத்த கத்தியோடு வன்னிகொன்றை கூவிளம்
தொடுத்துடன் சடைப்பெய்தாய் துருத்தியாயோர் காலனைக்
கடுத்தடிப் புறத்தினு னிறத்துதைத்த காரணம்
எடுத்தெடுத் துரைக்குமாறு வல்லமாகி னல்லமே. 2

கங்குல்கொண்ட திங்களோடு கங்கைதங்கு செஞ்சடைச்
சங்கிலங்கு வெண்குழை சரிந்திலங்கு காதினுய்
பொங்கிலங்கு பூணநூ லுருத்திரா துருத்திபுக்
கெங்குநின் னிடங்களா வடங்கிவாழ்வ தென்கொலோ. 3

கருத்தினுலோர் காணியில் விருத்தியில்லை தொண்டர்தம்
அருத்தியாற்றம் மல்லல்சொல்லி யையமேற்ப தன்றியும்
ஒருத்திபால் பொருத்திவைத் துடம்புவிட்டி யோகியாய்
இருத்திநீ துருத்திபுக் கிதென்னமாய மென்பதே. 4

துறக்குமா சொலப்படாய் துருத்தியாய் திருந்தடி
மறக்குமா றிலாதவென்னை மையல்செய்திம் மண்ணின்மேல்
பிறக்குமாறு காட்டினுய் பிணிப்படு முடம்புவிட்
டிறக்குமாறு காட்டினுய்க் கிழுக்குகின்ற தென்னையே. 5

வெயிற்கெதிர்ந் திடங்கொடா தகங்குளிர்ந்த பைம்பொழில்
துயிற்கெதிர்ந்த புள்ளினங்கண் மல்குதண் டுருத்தியாய்
மயிற்கெதிர்ந் தணங்குசாயன் மாதொர்பாக மாகமூ
எயிற்கெதிர்ந் தொரம்பினு லெரித்தவில்லி யல்லையே. 6

கணிச்சியம்ப டைச்செல்வா கழிந்தவர்க் கொழிந்தசீர்
துணிச்சிரக் கிரந்தையாய் கரந்தையாய் துருத்தியாய்
அணிப்படுந் தனிப்பிறைப் பனிக்கதிர்க் கவாவுநல்
மணிப்படும்பை நாகநீ மகிழ்ந்தவண்ண லல்லையே. 7

சுடப்பொடிந் துடம்பிழந் தநங்கனுய மன்மதன்
இடர்ப்படக் கடந்திடந் துருத்தியாக வெண்ணினுய்
கடற்படை யுடையவக் கடலிலங்கை மன்னனை
அடற்பட வடுக்கலில் லடர்த்தவண்ண லல்லையே. 8

களங்குளிர்ந் திலங்குபோது காதலானு மாலுமாய்
வளங்கிளம்பொ னங்கழல் வணங்கிவந்து காண்கிலார்
துளங்கிளம்பி றைச்செனித் துருத்தியாய் திருந்தடி
உளங்குளிர்ந்த போதெலா முகந்துகந் துரைப்பனே. 9

புத்தர்தத் துவமிலாச் சமணுரைத்த பொய்தனை
உத்தம மெனக்கொளா துகந்தெழுந்து வண்டினம்
துத்தநின்று பண்செயுஞ் சூழ்பொழிற் றுருத்தியெம்
பித்தர்பித்த னைத்தொழப் பிறப்பறுத்தல் பெற்றியே. 10

கற்றுமுற்றி ஞர்தொழுங் கழுமலத் தருந்தமிழ்
சுற்றுமுற்று மாயின னவன்பகர்ந்த சொற்களால்
பெற்றமொன் றுயர்த்தவன் பெருந்துருத்தி பேணவே
குற்றமுற்று மின்மையிற் குணங்கள்வந்து கூடுமே. 11

திருச்சிற்றம்பலம்

—திருஞானசம்பந்த சுவாமிகள்

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

பொருத்திய குரம்பைதன்னைப் பொருளெனக் கருதவேண்டா
இருத்தியெப் பொதுநெஞ்சு ளிறைவனை யேத்துமின்கள்
ஒருத்தியைப் பாகம்வைத்தங் கொருத்தியைச் சடையுள்வைத்த
துருத்தியஞ் சுடரினானைத் தொண்டனேன் கண்டவாறே. 1

சவைதனைச் செய்துவாழ்வான் சலத்துளே யழுந்துகின்ற
இவையொரு பொருளுமல்ல விறைவனை யேத்துமின்னோ
அவைபுர மூன்றுமெய்து வடியவர்க் கருளிச்செய்த
சுவையினைத் துருத்தியானைத் தொண்டனேன் கண்டவாறே. 2

உன்னியெப் பொதுநெஞ்சு ளொருவனை யேத்துமின்னோ
கன்னியை யொருபால்வைத்துக் கங்கையைச் சடையில் வைத்துப்
பொன்னியி னடுவுதன்னுட் பூம்புனல் பொலிந்துதோன்றுந்
துன்னிய துருத்தியானைத் தொண்டனேன் கண்டவாறே. 3

ஊன்றலை வலியனுகி யுலகத்து ளுயிர்கட்கெல்லாந்
தான்றலைப் பட்டுநின்று சார்கன லகத்துவீழ
வான்றலைத் தேவர்கூடி வானவர்க் கிறைவாவென்னுந்
தோன்றலைத் துருத்தியானைத் தொண்டனேன் கண்டவாறே 4

உடறனைக் கழிக்கலுற்ற வுலகத்து ளுயிர்கட்கெல்லாம்
இடர்தனைக் கழிக்கவேண்டி லிறைவனை யேத்துமின்றே
கடறனி னஞ்சமுண்டு காண்பரி தாகிநின்ற
சுடர்தனைத் துருத்தியானைத் தொண்டனேன் கண்டவாறே. 5

அள்ளலைக் கடக்கவேண்டி லரனையே நினைமினீர்கள்
பொள்ளலிக் காயந்தன்னுட் புண்டரீ கத்திருந்த
வள்ளலை வானவர்க்குக் காண்பரி தாகிநின்ற
துள்ளலைத் துருத்தியானைத் தொண்டனேன் கண்டவாறே. 6

பாதியி லுமையாடன்னைப் பாகமா வைத்தபண்பன்
வேதிய னென்றுசொல்லி விண்ணவர் விரும்பியேத்தச்
சாதியாஞ் சதுர்முகனுஞ் சக்கரத் தானுங்காணுச்
சோதியைத் துருத்தியானைத் தொண்டனேன் கண்டவாறே. 7

சாமனை வாழ்க்கையான சலத்துளே யழுந்தவேண்டா
தூமநல் லகிலுங்காட்டித் தொழுதடி வணங்குமின்றே
சோமனைச் சடையுள்வைத்துத் தொன்னெறி பலவுங்காட்டுந்
தூமணற் றுருத்தியானைத் தொண்டனேன் கண்டவாறே. 8

குண்டரே சமணர்புத்தர் குறியறி யாதுநின்று
கண்டதே கருதுவார்கள் கருத்தெண்ணு தொழிமினீர்கள்
விண்டவர் புரங்களெய்து விண்ணவர்க் கருள்கள்செய்த
தொண்டர்க டுணையினுனைத் துருத்திநான் கண்டவாறே. 9

பிண்டத்தைக் கழிக்கவேண்டிற் பிரானையே பிதற்றுமின்கள்
அண்டத்தைக் கழியநீண்ட வடலரக் கன்றனுண்மை
கண்டோத்துக் கால்விரலா லூன்றிமீண் டருளிச்செய்த
துண்டத்துத் துருத்தியானைத் தொண்டனேன் கண்டவாறே.

திருச்சிற்றம்பலம்

—திருநாவுக்கரசு சுவாமிகள்

பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

மின்னுமா மேகங்கள் பொழிந்திழிந் தருவி
வெடிபடக் கரையொடுந் திரைகொணர்ந் தெற்றும்
அன்னமாங் காவிரி அகன்கரை யுறைவார்
அடியிணை தொழுதெழு மன்பரா மடியார்
சொன்னவா றறிவார் துருத்தியார் வேள்விக்
குடியுளா ரடிகளைச் செடியனே னயேன்
என்னைநான் மறக்குமா றெம்பெரு மானை
என்னுடம் படும்பிணி யிடர்கெடுத் தானை. 1

கூடுமா றுள்ளன கூடியுங் கோத்துங்
கொய்புன லேனலோ டைவனஞ் சிதறி
மாடுமா கோங்கமே மருதமே பொருது
மலையெனக் குலைகளை மறிக்குமா றுந்தி
ஓடுமா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளா ரடிகளைச் செடியனே னயேன்
பாடுமா றறிகிலே னெம்பெரு மானைப்
பழவினை யுள்ளன பற்றறுத் தானை. 2

கொல்லுமால் யானையின் கொம்பொடு வம்பார்
    கொழுங்கனிச் செழும்பயன் கொண்டுகூட் டெய்திப்
புல்கியும் தாழ்ந்தும் பொங்கு தவஞ்செய்யும்
    போகரும் யோகரும் புலரிவாய் மூழ்கச்
செல்லுமா காவிரித் துருத்தியார் வேள்விக்
    குடியுளா ரடிகளைச் செடியனே னுயேன்
சொல்லுமா றறிகிலே னெம்பெரு மானைத்
    தொடர்ந்தடுங் கடும்பிணித் தொடர்வறுத் தானே. 3

பொறியுமா சந்தனத் துண்டமோ டகிலும்
    பொழிந்திழிந் தருவிகள் புன்புலங் கவரக்
கறியுமா மிளகொடு கதலியும் உந்திக்
    கடலுற விளைப்பதே கருதித்தன் கைபோய்
எறியுமா காவிரித் துருத்தியார் வேள்விக்
    குடியுளா ரடிகளைச் செடியனே னுயேன்
அறியுமா றறிகிலே னெம்பெரு மானை
    யருவினை யுள்ளன ஆசறுத் தானே. 4

பொழிந்திழி மும்மதக் களிற்றின மருப்பும்
    பொன்மலர் வேங்கையின் நன்மல ருந்தி
இழிந்திழிந் தருவிகள் கடும்புன லீண்டி
    யெண்டிசை யோர்களு மாடவந் திங்கே
சுழிந்திழி காவிரித் துருத்தியார் வேள்விக்
    குடியுளா ரடிகளைச் செடியனே னுயேன்
ஒழிந்திலேன் பிதற்றுமா றெம்பெரு மானை
    யுற்றநோ யிற்றையே யுறவொழிந் தானே. 5

புகழுமா சந்தனத் துண்டமோ டகிலும்
    பொன்மணி வரன்றியு நன்மல ருந்தி
அகழுமா வருங்கரை வளம்படப் பெருகி
    யாடுவார் பாவந்தீர்த் தஞ்சன மலம்பித்

திகழுமா காவிரித் துருத்தியார் வேள்விக்
    குடியுளா ரடிகளைச் செடியனே னுயேன்
இகழுமா றறிகிலே னெம்பெரு மானை
    இழித்தநோ யிம்மையே யொழிக்கவல் லானை. 6

வரையின்மாங் கனியோடு வாழையின் கனியும்
    வருடியும் வணக்கியு மராமரம் பொருது
கரையுமா கருங்கடல் காண்பதே கருத்தாய்க்
    காம்பீலி சுமந்தோளிர் நித்திலங் கைபோய்
விரையுமா காவிரித் துருத்தியார் வேள்விக்
    குடியுளா ரடிகளைச் செடியனே னுயேன்
உரையுமா றறிகிலே னெம்பெரு மானை
    யுலகறி பழவினை யறவொழித் தானை 7

ஊருமா தேசமே மனமுகந் துள்ளிப்
    புள்ளினம் பலபடிந் தோண்கரை யுகளக்
காருமா கருங்கடல் காண்பதே கருத்தாய்க்
    கவரிமா மயிர்சுமந் தோண்பளிங் கிடறித்
தேருமா காவிரித் துருத்தியார் வேள்விக்
    குடியுளா ரடிகளைச் செடியனே னுயேன்
ஆருமா றறிகிலே னெம்பெரு மானை
    யம்மைநோ யிம்மையே யாசறுந் தானை. 8

புலங்களை வளம்படப் போக்கறப் பெருகிப்
    போன்களே சுமந்தெங்கும் பூசல்செய் தார்ப்ப
இலங்குமா முத்தினே டினமணி யிடறி
    யிருகரைப் பெருமரம் பீழ்ந்துகோண் டேற்றிக்
கலங்குமா காவிரித் துருத்தியார் வேள்விக்
    குடியுளா ரடிகளைச் செடியனே னுயேன்
விலங்குமா றறிகிலே னெம்பெரு மானை
    மேலைநோ யிம்மையே வீடுவித் தானை. 9

மங்கையோர் கூறுகந் தேறுகந் தேறி
மாறலார் திரிபுரம் நீறெழச் செற்ற
அங்கையான் கழலடி யன்றிமற் றறியா
னடியவர்க் கடியவன் றொழுவனூ ரன்
கங்கையார் காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளா ரடிகளைச் சேர்த்திய பாடல்
தங்கையாற் றொழுதுதந் நாவின்மேற் கொள்வார்
தவனெறி சென்றம ருலகமாள் பவரே,

திருச்சிற்றம்பலம்

—சுந்தரமூர்த்தி சுவாமிகள்

துருத்தி தன்னி லருத்தியோ டிருந்தும்

உருத்தெரியாக் காலத்தே உள்புகுந்தென் னுளமன்னிக்
கருத்திருத்தி யூன்புக்குக் கருணையினா லாண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானைத் தித்திக்குஞ் சிவபதத்தை
அருத்தியினால் நாயடியே னணிகொள்தில்லை கண்டேனே.

—மாணிக்கவாசக சுவாமிகள்

வஞ்சியன நுண்ணிடையார் வாட்டடங்க ணீர்சோரக்
குஞ்சி குறங்கின்மேற் கொண்டிருந்து—கஞ்சி
அருத்தொருத்தி கொண்டுவா என்னாமு னெஞ்சே
திருத்துருத்தி யான்பாதஞ் சேர்.

—ஐயடிகள் காடவர்கோன்

நிதியார் துருத்திதேன் வேள்விக் குடியாய் நினைமறந்த
மதியேற் கறிகுறி வைத்துப் புகர்பின்னை மாற்றிடேன்று
துதியா அருள்சொன்ன வாறறி வாரிடைப் பெற்றவன்காண்
நதியார் புனல்வயல் நாவவர் கோனேன்னும் நற்றவனே.

—நம்பியாண்டார் நம்பிகள்

திருப்பதிகங் கொடுபரவிப் பணிந்துதிரு அருளாற்போய்
விருப்பினொடுங் திருத்துருத்தி தனைமேவி விமலர்கழல்
அருத்தியினாற் புக்கிறைஞ்சி அடியேன்மேல் உற்றபிணி
வருத்தமெனை ஒழித்தருள வேண்டும்என வணங்குவார்.

பரவியே பணிந்தவர்க்குப் பரமர்திரு வருள்புரிவார்
விரவியஇப் பிணியடையத் தவிர்ப்பதற்கு வேருக
வரமலர்வண் டறைதீர்த்த வடகுளத்துக் குளிஎன்னக்
காவில்திருத் தொண்டர்தாங் கைதொழுது புறப்பட்டார்.

மிக்கபுனல் தீர்த்தத்தின் முன்அணைந்து வேதமெலாம்
தொக்கவடி வாயிருந்த துருத்தியார் தமைத்தொழுது
புக்கதனில் முழுகுதலும் புதியபிணி அதுநீங்கி
அக்கணமே மணியொளிசேர் திருமேனி ஆயினர்.

கண்டவர்கள் அதிசயிப்பக் கரையேறி உடைபுனைந்து
மண்டுபெருங் காதலினால் கோயிலினை வந்தடைந்து
தொண்டரெதிர் மின்னுமா மேகம்எனுஞ் சொற்பதிகம்
எண்டிசையும் அறிந்துய்ய ஏழிசையால் எடுத்திசைத்தார்.

—சேக்கிழார் சுவாமிகள் (ஏயர். புராணம்)

8B
4-121

மங்கலந் திகழு நாவலூரார்க்கு
மருவுவெண் ணோய் தவிர்த்தவனே
எங்களாண் டவனே துருத்திமாநகரில்
இவர் முகிழாம்பிகைக் கிசைந்த
சங்கரா வேதேச் சுரவேனையாள்வாய்
சம்புவே சதாசிவப் பொருளே
சேங்கர மதனில் தமருகமுடைய
செல்வமே கருணைவா ரிதியே.

—சிவாலய மான்மியக் கோவை

TAMIL NADU ARCHIVES LIB. EGMORE MADRAS
112779

O 823:38.91193
N43-2